ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2355/43 - 2023 ඔක්තෝබර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.10.26

2355/43 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: DS/KU/LND/ACQUS/1/5

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/14/2020/CEB/82

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் கும்புறுப்பிட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் நில அளவையாளர் நாயகத்தின் 17.07.2023 ஆந் திகதி கடத்திரள் வரைபடம் CM 260225 இல் துண்டிலக்கம் 01 இன் 0.0334 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடைய பின்வரும் காணித் துண்டு:

**1. துண்டு இல. 1; விஸ்தீரணம்: 0.0334 ஹெக்டயார்.**

வடக்கு: வீதி (PS); கிழக்கு: கும்புறுப்பிட்டி தெற்கு கிராமத்தின் ஒரு பகுதி (TP 346434); தெற்கு: கும்புறுப்பிட்டி தெற்கு கிராமத்தின் ஒரு பகுதி (TP 346434); மேற்கு: கும்புறுப்பிட்டி தெற்கு கிராமத்தின் ஒரு பகுதி (TP 346434).

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குச்சவெளி பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கு. குணநாதன்,
பிரதேச செயலாளர்,
குச்சவெளி.

பிரதேச செயலகம்,
குச்சவெளி,
2023, ஒற்றோபர் 03.

EOG 10 - 0277

1A - G 40616 - 10 (2023 /10)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*